DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 35/2019 Crime No. 56/2019 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1/Lw1- இருசா | Village | |
| Father Name | தொப்ப நல்லா கவுண்டர் | Taluk | |
| Age | 34 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 13.05.2024 |

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச.311 ன் கீழ் இந்த சாட்சியை மறு அழைப்பு செய்ய மனு செய்யப்பட்டு, அது அனுமதித்ததின் பெயரில் குறுக்கு விசாரணை-**

எதிரிகள் என்னை தகாத வார்த்தைகளால் எனது வீட்டிற்கு பின்புறமுள்ள மோட்டார் ரூம் அருகே வைத்து திட்டினார்கள். சம்பவம் நடந்த இடத்திற்கும், பொது தடத்திற்கும் சுமார் 40 அடி தூரம் இருக்கும்.

நான் அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் தாக்கியதாகத்தான் கூறினேன். மோகன் என்னை ஒயரால் அடித்த காயத்தையும், அவரது அண்ணன் சிவக்குமார் கட்டிங் பிளேயரால் உதட்டில் அடித்த காயத்தையும் மருத்துவரிடம் காட்டினேன்.

ஆஜர் எதிரிக்கும், எங்கள் குடும்பத்திற்கும் பூமி சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. இந்த பிரச்சனை நடந்த பின்னர் அந்த பூமியை விற்றுவிட்டார்கள். நான் கூறுகிறேன் நீங்கள் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று கூறினாலும், எதிரி மீது இருந்த முன் விரோதத்தை மனதில் வைத்து வேறு சம்பவத்தில் நடந்த காயத்தை வைத்து எதிரி மீது பொய் வழக்கு கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால், சரியல்ல. எதிரிகள் என்னை அடித்தார்கள்.